ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2072/20 - 2018 මැයි මස 22 වැනි අඟහරුවාදා - 2018.05.22

*2072/20 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு மாத்தறை - மிரிஸ்ஸ நீர் வழங்கல் கருத்திட்டத்தை மேம்படுத்துவதன் பொருட்டு மாலிகாதென்ன பழைய நீர்த்தாங்கிக்கு பதிலாக புதிய நீர்த்தாங்கி ஒன்றினை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, மே 17,*
*5/2/2/1331.*

***அட்டவணை***

*மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை - கடவத்சதர பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 428ஏ, றுவன் எல்ல கிராம அலுவலர் பிரிவில் றுவன் எல்ல கிராமத்தில் அமைந்துள்ள காலிப் பிரிவு தவிர்ந்த நில அளவையதிகாரியினால் தயாரிக்கப்பட்டுள்ள மார 862 உடைய ஆரம்ப நிலவரைபடத்தில் துண்டு இலக்கம் 19 என குறித்துக்காட்டப்பட்டுள்ள காணியில் இருந்து அண்ணளவாக 2 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

*வடக்கு : மார 862 உடைய ஆரம்ப நிலவரைபடத்தில் துண்டிலக்கம் 13 கொண்ட காணி ;*
*கிழக்கு : கிராமத்திற்குச் செல்லும் வீதி ;*

1A - G 27709 — 29 (2018/05)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தெற்கு : கிராமத்திற்குச் செல்லும் வீதி ;

மேற்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* திரு. இலன்தாரிகே அன்திரியஸ்,
இல. 16, மாலிகாதென்ன,
மாத்தறை.

06-361

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை கழிவுநீரமைப்பு செயற்திட்டத்தின் கீழ், 08 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
இல. 35, 'லக்திய மெதுர',
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2018, மே 17,
5/2/2/1376.

**அட்டவணை**

கொழும்பு மாவட்டத்தில், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 479ஏ, பஹலவெல கிராம அலுவலர் பிரிவில் சிங்ஹபுர கிராமத்தில் அமைந்துள்ள காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து அண்ணளவாக 27 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : 817/பி இலக்கத்திற்குரிய கட்டிடம் ;

கிழக்கு : ரொஹினா மாவத்தை ;

தெற்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி ;

மேற்கு : இக்காணியின் மீதமாயுள்ள பகுதி.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :* கண்டறிய முடியவில்லை.

06-362

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.